**ஆண் :** ஏய்… ஆத்தா ஆத்தோரமா வாரியா
நான் பார்த்தா பார்க்காமலே போறியா
அடி… ஏய் ஆத்தா ஆத்தோரமா வாரியா
நான் பார்த்தா பார்க்காமலே போறியா
அட அக்கம் பக்கம் யாருமில்லே
அள்ளிக்கலாம் வா புள்ள

**ஆண் :** ஏய்… ஆத்தா ஆத்தோரமா வாரியா
நான் பார்த்தா பார்க்காமலே போறியா

**ஆண் :** ஆவாரம் பூவாக அள்ளாம துள்ளாம
அணைக்கத் துடிச்சிருக்கேன்
அச்சாரம் போட்டாச்சு அஞ்சாறு நாளாச்சு
தனிச்சு தவிச்சிருக்கேன்

**ஆண் :** தவிச்ச மனசுக்குத்
தண்ணி தர வேண்டாமா
தளும்பும் நெனப்புக்கு
அள்ளிக்கிறேன் நீ வாம்மா
மாருல குளிருது சேத்தென்ன அணைச்சா
தீருமடி குளிரும் கட்டிப்பிடிச்சிக்க

**ஆண் :** ஏய்… ஆத்தா ஆத்தோரமா வாரியா
நான் பார்த்தா பார்க்காமலே போறியா
அட… அக்கம் பக்கம் யாருமில்லே
அள்ளிக்கலாம் வா புள்ள

**ஆண் :** நான் போறேன் முன்னால
நீ வாடி பின்னாலே
நாயக்கர் தோட்டத்துக்கு
பேசாதே கண்ணால என்னாடி அம்மாலே
வாடுற வாட்டத்துக்கு

**ஆண் :** சிரிச்ச சிரிப்பில
சில்லரையும் செதருது

செவந்த மொகங்கண்டு
எம்மனசு பதறுது
பவள வாயில தெரியுற அழகப்
பாத்ததுமே மனசும் பட்டுத் துடிக்குது

**ஆண் :** ஏய்... ஆத்தா ஆத்தோரமா வாரியா
ஹா ஆஅ ஆஅ
நான் பார்த்தா பார்க்காமலே போறியா
அட அக்கம் பக்கம் யாருமில்லே
அள்ளிக்கலாம் வா புள்ள

**ஆண் :** ஏய்... ஆத்தா ஆ ஆ ஆத்தோரமா வாரியா
நான் பார்த்தா பார்க்காமலே போறியா
**விசில் :** ..........................................